[திரு. த. பழனி]

(53) திருச்சி சாராயக்கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரிலுள்ள சாராயக் கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் துர்நாற்றத்தால் செந்துண்ணீர்புரம் குழந்தைகள் மயக்கமடைவதோடு அப்பகுதியிலுள்ள குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

(54) தாம்பரபரணி ஆற்றில் கே. டி. சி. கழகப் பணிமனை கழிவு நீர் கலப்பது குறித்து.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பாளையங்கோட்டை தொகுதி, வண்ணாரப்பேட்டையிலுள்ள கே.டி.சி. போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் சுகாதாரக்கேடுகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

(55) பாலாற்றில் தோல் தொழிற்சாலை கழிவுநீர் காப்பது குறித்து

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆற்காடு, இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் பாலாற்றில் தோல் தொழில் சம்பந்தப்பட்ட கழிவு நீர் கலப்பதால் அப்பகுதியிலுள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் விவசாய நிலங்கள் பாழ்படுவதால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

(56) கூடலூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. உச்சி அவர்கள் ''நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசு